திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று அங்கே தனியாக இல்லை என்றாலும், ஒரே ஒரு டாக்டரே, அந்தப் பிரிவில் இருந்து கொண்டு, மற்ற துறைகளில் இருந்து டாக்டர்களை துணைக்கு அழைத்து வைத்துக்கொண்டு, இந்தப் பணிகளை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலைமைகளை கருதி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? அத்தோடு, பீடியாட்ரிக் யூனிட்டை பி. ஜி. கோர்ஸ் தகுதிக்கு உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே ஒரு சர்ஜரி டிபார்ட்மெண்ட் இயங்கிகொண்டு வருகிறது. அந்த சர்ஜரி டிபார்ட்மெண்ட்டே பிளாஸ்டிக் சர்ஜரி பணியையும் நடத்திக்கொண்டு வருகிறது. பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று தனியாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை பலமுறை சொல்லியிருக்கிறார்கள். கேள்வியாகவும் கேட்டிருக்கிறார்கள். நானும், அதற்குப் பிறகு, அங்கே செங்கல்பட்டில் உள்ள அந்த மருத்துவ மனைக்குப் போய் பார்த்திருக்கிறேன். எனக்கும் அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் தேவைதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை நிச்சயமாகக் கவனிக்கப்படும். பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் ஒன்று அங்கே நிச்சயமாக ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆயக்குடி அரசு மருத்துவமனை.

242(*வினா 19839) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி அரசு மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அங்கு பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர் ?

(இ) பெண் மருத்துவர் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) எனவே, பெண் மருத்துவரை நியமிக்க அரசு உத்தரவிடுமா ?

1984 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) 10 படுக்கைகள் உள்ளன.

(ஆ) இருவர்.

(இ) தற்போது பணியிலிருக்கும் பெண் மருத்துவர் 1–9–1983 முதல் பணியாற்றி வருகிறார்.

(ஈ) கேள்வி எழவில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்குடி அரசு மருத்துவ மனையில் தற்சமயம் பெண் மருத்துவர் வந்து விட்டார். அங்கே 2 டாக்டர்கள் இருக்கிறார்கள். 20 படுக்கைகள் இருக்கின்றன. மாலை 4 மணி 5 மணி ஆகிவிட்டால் இரண்டு டாக்டர்களுமே அங்கே தங்குவது கிடையாது. Quarters இருக்கிறது. திண்டுக்கல் டி. எம். ஓ. அவர்களிடமும் இது குறித்து நான் சொன்னேன். அவர்கள், டிரான்ஸ்பர் போட்டாலும் ரத்து செய்து விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அங்கேயே தங்கி, தேவையான சிகிச்சையை அளிப்பதற்கு உரிய வகையில் டாக்டர்களை அங்கே நியமிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் மிகச் சாமர்த்தியமாக என்னை அழைத்துக் கொண்டு போய் அதை விஸ்தரிக்க ஏற்பாடு செய்தார்கள். ஏற்கெனவே மருத்துவப் பிரிவு ஒன்றை அங்கே ஏற்படுத்திக் கொடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சியை தெரிவித்து அன்றைக்கு அவருடைய பேச்சிலே சொல்லியிருக்கிறார்கள். அது பழனி ஆஸ்பத்திரிக்கு 9 மைல் தூரத்தில் இருக்கிறது. நெடுஞ்சாலையில் இருக்கிறது. ஆகவே, படிப்படியாக நிதிநிலைக்கு ஏற்ப அவருடைய கோரிக்கை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நமது அமைச்சர் மீது குறை எதுவும் சொல்லவில்லை. அங்கே ஏற்கனவே இருக்கக்கூடிய இரண்டு டாக்டர்கள் அங்கேயே இருப்பதற்கு உத்திரவாதம் வேண்டும். அதைத்தான் கேட்கிறேன். மற்ற பிரச்னையைப் பற்றி சொல்லவில்லை. மேற்கொண்டு, அங்கே 2 படுக்கைகள் இருப்பதால், 2 டாக்டர்கள் மட்டுமே இருப்பது போதவில்லை. ஒருவர் லீவில் சென்றால், ஒருவர் தான் இருக்கிறார்கள் ஆகவே, இன்னொரு டாக்டரையும் போடுவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.